எம்மிடம்......
இறக்குமதி செய்யப்பட்ட
ரெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.
H.ESMAILJEE&Co
71-73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 8016

விலை: சதம் 75 ★★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 2 துல்ஹஃ 18 இதழ் 216
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-9-1981

யாழ் ஹோல்
[YARL HALL]
93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
A/L 82 April மீட்டல்வகுப்புகள்
தூயகணிதம்—தொடர்
பிரயோக கணிதம்-வேகநேரவளையி
இன்று 18-9-81 வெள்ளி மாலை 5-30 ஆரம்பமாகிறது.
ஆசிரியர்: A. பத்மநாதன்
0972

# வெளியேற்றம்: ஆட்சேபித்து 'நெவில்' உயர்நீதிமன்றில் மனு?

## குற்றம் என்ன செய்தேன் என்று கேட்கின்ருர்

(கொழும்பு)

இனக்கலவரத்தைத் தூண்டும் விதத்தில், பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உரைகள் நிகழ்த்திய 'குற்றச்சாட்டின்' மீது, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவினுல் நேற்று முன்தினம் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்ணுண்டோ, செயற்குழுவின் தீர்மானத்தை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வார் எனத் தெரியவருகிறது.

இது பற்றி டாக்டர் நெவில் பெர்ணுண்டோ கருத்துத் தெரிவிக்கையில்; "குற்றம் எதுவும் செய்யாத என்னை குற்றவாளியாக எப்படிக்கணிக்கமுடியும்" என்று கேட்டார்.

நேற்று முன்தினம் கூடிய ஐ. தே. கட்சியின் செயற்குழு பிரதி அமைச்சர் திரு. பிரேமச் சந்திரா உள்ளிட்டு ஐந்து எம். பி.க்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதும், இவர்களில் ஒருவரான டாக்டர் நெவில் பெர்ணுண்டோ எம். பி. பதவியிலிருந்தும், கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டதும் தெரிந்ததே.

புதிய அரசியலமைப்பின்படி பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரை கட்சி வெளியேற்றினுல்; அவர் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியையும் இழந்துவிடுகின்ருர். இவருக்குப் பதிலாக கட்சி புதிய அங்கத்தவர் ஒருவரை நியமிக்கும்.

[6-ம் பக்கம் பார்க்க

## கள்ளபாஸ்போர்ட்: 80 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டுமாதமாக பொலிசார் மேற்கொண்ட தீவிர கண்காணிப்பால் இது வரை எண்பதுபேர் போலிகடவுச்சீட்டு (பாஸ்போட்) டன் வெளிநாடு பயணமாகவிருந்த போது கட்டுநாயக்கா விமான நிலயத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த கள்ள பாஸ்போட் வேலைகளில் ஈடுபட்டவர்களை தேடி பொலிசார் வலைவீசித்துள்ளனர்.

அதேவேளை மேசடிகள் செய்யமுடியாத பத்திரங்களில் கடவுச்சீட்டுகளை (பாஸ்போட்) வழங்க குடிவரவு குடியகல்வு திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. [கு]

## பஸ் விபத்து 40 பேர் பலி

புதுடில்லி. செப். 17

கான்பூரில் பஸ் ஒன்று ஆற்றில் விழுந்ததால் 40பேர் பலியானர்களென்று அறிவிக்கப்பட்டது. இவ் விபத்தில் பலர் காயமடைந்ததாகவும்தெரிவிக்கப்பட்டது.

## பகிஷ்கரிப்பு தொடரும்?

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு நேற்றுக் கூடியபோது, பகிஷ்கரிப்புப் பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை

கூட்டணியின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு தொடரும் எனத்தெரியவருகிறது [ம]

## 'எம். பி க்களைப்போல் மாவட்டசபையில் எதையும் பேசமுடியாது'

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு இருக்கும் சிறப்புரிமைகள் மாவட்டசபை உறுப்பினர்களுக்கு இல்லை என்று பொறுப்பான அமைச்சரான பிரதமரே தெரிவித்துள்ளார்"

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது பதில் தலைவரான திரு. எஸ். நாகராசா, உறுப்பினர் திரு.ந.இராசேந்தி

[6-ம் பக்கம் பார்க்க]

கே. ஜி. இன்டஸ்ரீஸாரின்
பிளாஸ்டிக் பொருட்களின் வடபகுதி ஏக ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேம்.
★ வாளிகள்
★ பேசன்கள்
★ கோப்பைகள்
★ ஜாடிகள்
மற்றும் பல வீட்டுப் பாவனைப் பெருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் வழங்கப்படும்.
லேடன் ட்ரேட்ஸ்
(சேகரம் கட்டிடம்)
188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8162

## யாழ்.பனைஓலைப்பொருட்கள் பிரான்சுக்கு ஏற்றுமதி

(சுண்டிக்குளி)

யாழ். மாவட்டத்தின் பனை ஓலைப் பொருட்களுக்கு வெளி நாடுகளில் நல்ல மதிப்பும், கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட குடிசைக் கைத்தொழில் பகுதியினரின் ஆதரவில் இயங்கிவரும் பயிற்சி நிலையங்களில் கைப்பணி வேலைகளில் பயிற்சி பெறும் இளம் பெண்களின் பனைஓலைப் பொருட்கள் மிகுந்த கலைவண்ணமும், அழகும், உறுதியும்வாய்ந்தவையாகவும் காணப்படுவதால் வெளிநாட்டவரின் மனதை இவை கவர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடிசைக் கைத்தொழில்பகுதியின் தலைமைப்பீடம் யாழ். மாவட்ட குடிசைக் கைத்தொழில் நிலயங்களிலிருந்து பெறப்பட்ட பனை ஓலைத் தட்டங்கள், விளையாட்டுப் பொருட்கள், மேசைத் தட்டங்கள் போன்ற சுமார் 1000 பொருட்கள் சமீபத்தில் பிரான்சுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். குடிசைக் கைத்தொழில்பகுதியைச் சேர்ந்த அதிகாரி திரு. கே. எம். சிவகுருநாதன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட குடிசைக் கைத்தொழில்பகுதியின் கீழ் புத்தூர், நெல்லியடி, வதிரி, பண்ணாகம், கிளிநொச்சி, சுன்னாகம் போன்ற இடங்களில் சுமார் 6 கைத்தொழில் நிலையங்கள் செயல்பட்டுவருவதாகவும் இவற்றில் சுமார் 150 பேர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [அ]

## எம். ஜி. ஆருக்கு 'அமிர்' செய்தி

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கண்டித்து ஒருநாள் ஹர்த்தால் நடத்தியமைக்காக தமிழ்நாடு அரசையும் ஏனைய தமிழ்நாடு அரசியல் கட்சிகளையும் பாராட்டி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் தமிழ் நாடு

[3ம் பக்கம் பார்க்க]

ஏல விற்பனை

யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபையின் பொது களஞ்சியத்தில் இருக்கும் 193 ருத்தல் எடையுள்ள பழைய செப்புத் தகடுகள் 18-9-81 வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்திபெற்ற கேள்விக்காரர் உடனே உரிய தொகையைச் செலுத்திப் பொருளையும் அகற்றிக் கொள்ள வேண்டும்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாணமாநகரசபை.
0970

## இல்லத்தரசிகளுக்கு இனிப்பான செய்தி

★ சிக்கனமான, சுவையான, சுலபமான முறையில் இயங்கும் எல். பி. ஹாஸ் குக்கர்களுக்கான ஹாஸ் சிலிண்டர்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. கடைசிச் சந்தர்ப்பமாக ஹாஸ் சிலிண்டர்களுக்கு "டிபலிட்களை" செலுத்தி ஓரிரு தினங்களில் பெற்றுக்கொள்ளுங்கள். இதுவே கடைசிச் சந்தர்ப்பம்.........

★ உங்கள் நண்பி – சமையலின் ராணி, யப்பானிய நிகரற்ற உற்பத்தி

றினை ஹாஸ் குக்கர்கள் — ஓவன்கள்

**RENNAI COOKER & OVEN**

ஏழு மாடல்களில் ரூபா 925/- முதல் 4100/- வரை
சகல உப உறுப்புகளும் தாராளமாகக் கிடைக்கின்றன.

★ மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு.........

★ பரடைஸ் ஹெல்மட் வர்ணநிறங்கள் (PARADISE HELMAT) விலை 375/-

★ ஸ்ரேடியம் ஹெல்மட் நவீன டிசைன்கள் (STADIUM HELMAT) விலை 525/-

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்திற்கு அமைவானதென உறுதிப்படுத்தப்பட்டது
எப்பொருட்களுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்

## முகமதலி அப்துலலி

5-7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

போன்: 515



## லக்ஸபான தரும் ஒரு சக்தி-வாய்ந்த உத்தரவாதம் பாதுகாப்பளிக்கும் மூடி

இப்பொழுது உங்கள் லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறி மேலுள்ள பிளாஸ்டிக் பாதுகாப்பளிக்கும் மூடி நிறைந்த சக்தியை உறுதிப்படுத்துவதுடன் செவிக்கு இன்பமளிக்கும் நேரத்தையும் அதிகரிக்கும்.

பிளாஸ்டிக் பாதுகாப்பளிக்கும் மூடியை அறிமுகப் படுத்துவதன் மூலம், சிறந்ததையே வழங்க வேண்டுமென்பதற்கு இன்னொரு அடியை முன்னேக்கி வைக்கிறேம். இதுவே நிறைந்த சக்திக்கு உறுதி வழங்குகிறது.

உறுதிபடுத்தப்பட்ட மனநிறைவிற்கு பிளாஸ்டிக் பாதுகாப்பளிக்கும் மூடியுள்ள சக்தி வாய்ந்த லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறியைக் கேட்டு வாங்குங்கள்.




De Alwis C 81/495

வாங்குக- சக்திநிறைந்த லக்ஸபான


# வரி விளம்பரம்

## தேவை

தேர்ச்சி பெற்ற லேத் வேலையாட்கள் தேவை. அத்தாட்சி பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். சில்வர்கிரசர் இண்டஸ்ரீஸ், 103, பிரவுண் வீதி, கொக்குவில். 0960

மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடுதேவை. ரூ 250— ரூ. 300 இடையில் வாடகைதரப்படும். விண்ணப்பிக்க விளம்பர இல 0966 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 0966

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவன மொன்றிற்கு ஐந்து வருடத்துக்கு மேல் வியாபார அனுபவமுள்ள (விற்பனையாளர்) கவுண்டர் கிளாக் உடனடியாகத்தேவை. இவர் ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல எழுத்து எழுதக் கூடியவராயும் இருத்தல் வேண்டும், மேலும் நாற்பது வயதுக்கு மேற்படாமலும், நம்பிக்கைக் குரியவராயும் இருத்தல் விரும்பத்தக்கது. தகுதியுள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் 25-9-81 முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 0956 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0956

## பயிற்சி

வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வயறிங் வகுப்புக்கள் (செய்முறையுடன்) ஆரம்பம்: C. E. T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம், [சாந்தி சினிமாவிற்கு முன்] 22, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 0975

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 2 ம் திகதி
வெள்ளிக்கிழமை
(18-9-81)

மேடம்: அதிக ஆவசயினுல் அவஸ்தைப்படுவீர்கள், சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம். குறுக்கு வழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். அமைதி நன்று.

இடபம்: இதயப்படுதாவின் இன்பக்கூத்து. வாழ்க்கையில் சில காரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதனுல் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுவோர்கள் போற்றப்படுவார்கள்.

மிதுனம்: சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் உஷாராக இருக்கவேண்டும்

கடகம்: தாய்வழியால் பெருமைகள் சேரும். தனத்தடன் வாழ்வு கிடைக்கும் எதிரிகள்கூட உங்களை வரவேற்பார்கள். மருத்துவத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்

சிங்கம்: மகிழ்ச்சிதரும் செய்தி ஒன்று கிடைக்கக்கூடும். இதயத்தில் இனம்புரியாத ரேகைகள் படரும். தெய்வ வழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

கன்னி: தாலிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும், தனிவழியை நாடுவீர். அமைதியும் பறக்கும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

நவீன முறையில் பனைமரத்தினால் தயாரிக்கப்பட்ட வரவேற்பு மேசை, பீரோக்கள், கதிரைகள் பரிமாறும் கோப்பைகள், தண்ணீர் குடிக்கும் கிளாஸ்கள், கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள், கத்திகள், ஒரு ஹோட்டலுக்கு கந்த 25 கொத்து உழுந்து அரைக்கக்கூடிய மா அரைக்கும் இயந்திரம். தொடர்பு 241, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (0959)

8 கன அடி LEC மொடல் டிபிறிஜ் (Refrigerator) ஒன்றும் ஒருபீஸ் 3 K V ஜெனறேற்றர் ஒன்றும் விற்பனைக்குண்டு. கல்வேபாட், பண்டத்தரிப்பு. 0964

பாவித்துக் கழித்த 45 லெவல் பெற்று றம்களும் வில்லுத்தகடு முதலான பழைய இரும்புகளும் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 0968

British Leyland Van LD 7. FG 350 27 ஸ்ரீ விற்பனைக்கு உண்டு 22, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி. 0971

வீடு கிணற்றுடன் சேர்ந்த இரண்டரை பரப்புக்காணி உடுவில் லேன் கோண்டாவில் மேற்கில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சு. சுந்தரம், தாவடிச் சந்தி. 0932

கல்வியங்காடு நியூ செம்மணி வீதியில் வீடுகட்டுவதற்குரிய ஏழு, பரப்புக்காணி, சுமார் முப்பது காய்க்கும் தென்னை மரங்களுடன் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க எஸ். கே. லிங்கம், அம்மன் கோவிலடி, பருத்தித்துறை வீதி. கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 0955

உறுதியான பெரிய இரட்டைக்கல் இரும்புப் பெட்டகம். 12 லாச்சி உள்ளது 5½ அடி உயரம் 2¾ அடி அகலம் நகைக்கடை அடைவு கடைபாவனைக்கு ஏற்றது உடன் பார்வையிடவும். பாலஸ் நகைக்கடை, 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 0974

யாழ்ப்பாண அக்கடமி
க.பொ த உயர்தர பரீட்சை
ஏப்பிரல் 1982

## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன இன்னும் சில இடங்கள் மட்டுமே உண்டு சேர விரும்புவோர் உடன் சேரவும். 1981 பரீட்சை பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டா.

அதிபர்

தொலைபேசி எண். 617.
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0946

## அறிவித்தல்

உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்

மேற்படி சங்கத்திற்கு ஓர் சொல்வளவு உத்தியோகத்தர் தரம் 11. தேவைப்படுகின்றது.

தகைமையுள்ளோர் 30-9-81க்கு முன் சங்கத்தால் வழங்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்கவும். மேலும் விபரம் தேவைப்படின் பொதுமுகாமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
0967

**மணிவாக்கு**

முதுகெலும்பு முற்றிய மனிதனே மனிதன்; அவனை அடக்கி ஆள்வது அரிதினும் அரிது.

— ஹென்றிதோரோ

# நமது நோக்கு

## உலகின் உப்பு

பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்ணாண்டோவை பாராளுமன்ற அங்கத்துவ பதவியிலிருந்தும், ஐ. தே கட்சியிலிருந்தும் நீக்குவதென்ற தீர்மானம் நீதியின்மேல் பசிதாகமுள்ள அனைவருக்கும் சரியெனப்படும்.

தாமதித்து வழங்கப்படும் நீதி, மறுக்கப்பட்ட நீதியென்று சட்டமரபு கூறுகின்றது. இருந்தும் தாமதித்தாவது தவறுகளுக்குத் தண்டனை கிடைப்பது நாட்டில் நீதிக்கு இடமுண்டென்ற நம்பிக்கையை உயிர்ப்பிக்க வல்லது

'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் உப்பானது சாரமற்றுப்போனால், எதனால் சாரமேற்றப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.''

பலரும் அறிந்த விவிலியா வாக்கு இது. பாராளுமன்றம் நாட்டை ஆளும் மன்றம். அதற்குத் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதி ஒருவர் அத்தொகுதிமட்டுக்குமல்ல நாடு முழுவதற்கும் வழிகாட்டும் பொறுப்புடையவர்.

பொறுப்புடைய மக்கள் தலைவர் பொறுப்பற்ற ஒழுக்கமற்ற முறையில் நடக்க நேரிட்டால், தண்டனைக்கு காத்திராமல் தாமே அப்பதவியைத் துறக்க முன்வரவேண்டும்.

இந்தியாவின் இரண்டாவது பிரதமர் காலஞ்சென்ற லால்பகடூர்சாஸ்திரி, றெயில் போக்குவரத்து அமைச்சராகவிருந்தபோது 'அரியலூர் றெயில் விபத்தை'க் கேள்விப்பட்டதும் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். இது அமைச்சரவையிலேயே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பதவியைத் துறந்த அமைச்சர் சாஸ்திரி தம்முடைய கடைசிநாட் கருமங்களை அரசாங்க ஜீப்பில் சென்று கவனித்து அலுவலகத்துக்குத் திரும்பியதும் அரசாங்க ஜீப்பின் உபயோகத்தை நிறுத்தி, தமது இல்லத்துக்கு சாதாரண பஸ் வண்டியில் சென்றார் என்பது கதை.

நிர்வாகத் திறமையும் பொறுப்புணர்வும் ஒழுக்கமும் மேலோங்கி நின்றதால் இந்திய நாட்டின் பிரதமராக நேருவுக்குப்பின் சிறப்பாகப் பணிபுரிந்தாரென்பது அர்த்தமாகும்.

இக்காலத்தில் இந்தியாவிலோ அல்லது இங்கோ வேறெங்கோ இந்த ஒழுக்க உணர்வு உயர்வடைந்திருப்பதை நாம் காண முடியவில்லை.

ஆரம்பந்தொட்டு ஐ. தே கட்சி சட்டத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்து வந்ததென பொதுமக்கள் மத்தியில் ஒருநம்பிக்கை நிலவியிருந்தது'

ஆட்சியின் குறைபாடுகள் என்னவானாலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவல்ல ஆட்சியென்பதைத் தமிழ் மக்களும் நம்பியிருந்தனர்.

1977ம் ஆண்டு நிகழ்ந்த இனக்கலவரம் இதற்கு முற்றுப்புள்ளியிட்டது. பின்பும் நாட்டில் தொடர்ந்துவரும் குழப்ப நிலை இன்று இனக்குரோதத்தின் உச்சநிலைக்கு வழிகாட்டியது.

எந்தப்பயங்கரவாத நிலையையும் ஆட்சி முறியடிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும் அதனைத்தட்டிக் கழித்தல் பேராபத்தென்பது தெளிவு.

இனக்கலவரங்கள் நாட்டுக்குப் புதிதானவையல்லவென்று அசட்டை செய்யும் மனப்பாங்கு இன்று இங்கு பல இடங்களிலும் காணப்படுகின்றது. இதற்குப் பலியாகின்றவர்கள் சிறுபான்மை இனத்தவரே.

இதுவே நாட்டின் வளர்ச்சிக்கும், மக்கள் பாதுகாப்புக்கும் இயமனாகவுள்ளது.

பல நூற்றாண்டுகளாக சமாதானமாகவும் நாகரீகமாகவும் வாழ்ந்துவந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இங்கும் அங்கும் இடம் பெற்ற அசம்பாவிதங்களைத் தேடி ஆராய்ச்சிசெய்து அவற்றைத் தூக்கிப்பிடிப்பது நாட்டின் சமாதான வாழ்வுக்கு நாசம் விளைவிக்கும் செயலாகும்'.

நெருப்பும் பஞ்சம்போன்ற நிலை சிலவேளைகளில் தோன்றுவது இயல்பு. அதனைத் துர்ப்பிரயோகஞ் செய்து சாதாரண மக்களை துஷ்டர்களாக்கி, கொலை, களவு, தீவைப்பு, கற்பழிப்பு போன்ற துரோகச்செயல்களில் ஈடுபடுத்துவது நாட்டுக்கே தீவைக்கும் செயல்போன்றது.

கதியற்ற ஏழை மலையக மக்களைத் துன்புறுத்தல் கோழைத்தனத்தின் உச்சநிலையாகும். பாதுகாப்பற்ற தமிழ்மக்களைத் துன்புறுத்த ஆட்சியிலிருக்கும் பாராளுமன்ற அங்கத்தவர்களே உடந்தையாகவிருந்தால் அது சாதாரண கலவரம் அல்ல என்பது முடிவு'

பாராளுமன்ற ஆட்சிக்கு பங்கம் விளைவித்த எவரும் இனக்குரோதத்தை இவ்வளவு தூரம் தூண்டிய ஆட்சியின் உறுப்பினரும் தக்கதண்டனைக்குள்ளானால் இன்றைய ஆட்சிக்கு ஓரளவு மீட்சிகிட்டும்.

அரசியல் விவகாரங்களில் ஆழ்ந்த அனுபவமும், ஒழுக்கத்திலும் கண்டிப்பான நிர்வாகத்திலும் பெரு நம்பிக்கை கொண்ட ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு குழப்ப நிலையை சீரமைக்க நன்மக்களின் போதிய ஒத்துழைப்பு கிடைக்குமென நம்புகின்றோம்.

## பாடசாலை பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச்சிகளும், நாளை மாலை வித்தியாலய திறந்தவெளி அரங்கில் வித்தியாலய அதிபர் திரு. சி. இராமநாதன் தலைமையில் நடைபெறும்.

[கு]

# புரட்டாதிச்சனி வார வழிபாடு நாளை ஆரம்பம்

இறைவன் ஆணைவழி மேஷமாதி மீனம்வரையுள்ள பன்னிரண்டு இராசிகளில் இடங்கொண்டிருந்து உலகமக்களின் வாழ்க்கையிற் பெறற்குரிய இன்பதுன்பங்களைத் தோற்றுவித்து அருள்புரியவர்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய நவக்கிரக மூர்த்திகள். இவ்வொன்பது மூர்த்திகளுள் அதிநன்மையையும் அதிதீமையையும் விளைவிப்பவர் சனிபகவானேயாவர்.

சனிபகவான், சூரியனுக்குச் சாயாதேவியிடம் தோன்றியவர். இதனால் 'சாயாபுத்திரர்' என்று அழைக்கப்படுவர். இவர் ஒரு இராசியினின்றும் மற்றொரு இராசிக்கு இரண்டரை ஆண்டுக்கொருமுறை செல்வதால் மெதுவாகச் செல்பவன் என்ற கருத்தமைந்த 'சனைச்சரன்' என்ற நாமத்தையும், மெதுவாகவுள்ளவன் என்ற கருத்தமைந்த 'மைந்தன்' என்ற நாமத்தையும் உடையவர், காகத்தை வாகனமாகக் கொண்டவர்.

அவர் நீலமான ஆடையணிந்தவர்; கறுத்த திருமேனியுடையவர்; சூரியனின் புதல்வர்; இயமனுக்கு முன் பிறந்தவர்; சாயாதேவியினிடம் பிறந்தவர்; மெள்ளச் சஞ்சரிப்பவர் என்று அவருடைய வடிவம் விளக்கப்பட்டிருக்கின்றது மற்றும் சௌராட்டிர தேசத்திற் பிறந்தவர்; காசிப கோத்திரத்தில் உதித்தவர்; விகாரிவருடம் பிறந்தவர்; இவருடைய நட்சத்திரம் ரோகிணி; இவருக்குச் சொந்தமான வீடு மகரம், கும்பம் என்ற இரண்டும்; இவருக்கு உச்சஸ்தானமாக உள்ள வீடு துலாம் என்ற இராசியாகும்.

கோசரம் என்பது சூரியன் முதலாய நவக்கோள்கள் தத்தமது காலவரையறைப்படி மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் ஆகிய பன்னிரண்டு இராசிகளிலும் சஞ்சரிக்கும் நிலை. இம்முறையில் சூரியன் ஒவ்வோர் இராசியிலும் ஒரு மாதமிருந்து பிறகு அடுத்த இராசிக்குப் போவார். இதுபோல் சந்திரன் இரண் நாள் வீதமும், செவ்வாய் ஒன்றரை மாதமும், புதன் ஒரு மாதமும், குரு ஒரு வருடமும், சுக்கிரன் ஒரு மாதமும், சனி இரண்டரை வருஷமும், ராகு கேது தனித்தனி ஒன்றரை வருடமும் நின்றுசஞ்சரிப்பார்கள்.

**ஆராதனன்**

ஜன்மராசி. அதற்கு இரண்டாம் இராசி, நான்காவது இராசி, எட்டாவது ராசி பத்தாவது ராசி, பன்னிரண்டாவது ராசிகளில் சனிபகவான் வீற்றிருக்குங் காலம் அந்தந்த இராசிக்காரர்களுக்குப் பெருங்கேடுகள் ஏற்படும் அவர்கள் சனிபகவான் பிரீதியின் பொருட்டு எள்ளெண்ணெய் தீபமேற்றல், எள்அன்ன நிவேதனம், எள்தானம் கறுப்பு வஸ்திர தானம் என்பன செய்தல் வேண்டும்.

பொதுவாக ஒவ்வொருவருக்கும் ஜன்மராசிக்கு, பன்னிரண்டு ஜன்மராசி. ஜன்மராசிக்கு. இரண்டாம்இடம் என்ற இடங்களில் சனிபகவான் வரும்போது அவர்களுக்கு ஏழரையாண்டுச்சனி எனப்படும் அந்தக்காலம் அந்த இராசிக்காரர்களுக்கு ஒரு சோதனைக்காலம். ஆயினும், அந்தந்தக் காலங்களில் சனிக்கிழமைதோறும், மற்று தனது ஜன்மநட்சத்திரம் சனிக்கிழமைகளில் வருங் காலத்திலும் வன்னிப்பத்திரத்தால் அருச்சனை செய்வித்து எள்ளன்ன நிவேதனம், எள்ளெண்ணெய்த் தீபம் முதலியவைகளால் சனிபகவானை மகிழ்வித்தால் சனிபகவானால் வரும் இன்னல் நீங்கி மகிழ்வு பெறுவர். சனிபகவான் மகிழ்வு பெற்று இன்னல் நீங்கி, கிரகபீடைகளையகற்றி நன்மை செய்வார்: இராச்சியத்தையே அளிப்பார். கோபங்கொள்வாரேயாகில் கொடுத்த இராச்சியத்தை அபகரித்துத் தாளாத் துயரையளிப்பார். இஃது நளமகாராசன் வரலாற்றால் யாம் உணரலாம்.

பக்தர்கள் புரட்டாதிச்சனி வாரங்களில் விசேஷமாக விஷ்ணு ஆலயங்களிள் மற்றும் சிவாலயங்களிலும் சனியகவான் உள்ள ஆலயங்களிலும் சனீஸ்வரனுக்கு எள்ளெண்ணெய் எரித்து ஆராதித்து கிரகபீடை நீங்கி நலம் பெறுவார்களாக.

இம்முறை கீரிமலை நகுலேஸ்வரம் சிவாலயத்தில் சனி வழிபாட்டுக்கு விஷேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## மக்கள் கருத்து

### பாவிக்கப்படாத தண்ணீர் தொட்டி

விடத்தல்தீவு கிழக்குப்பகுதி மக்களின் குடிநீர்ப்பிரச்சினையை ஓரளவாகிலும் சமாளிக்கும் நோக்குடன் சில வருடங்களுக்கு முன்பு விடத்தீவு கிராம சபையின் முயற்சியால் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்ட குடிதண்ணீர்த் தொட்டி இன்று வரை பாவிப்புக்குப் பயன்படுத்தப்படாது இருந்து வருகின்றது.

இதையிட்டு மன்னார் மாவட்ட முன்னேற்ற சங்கம் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவருக்கும் செயலாளருக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் குழாய் இணைப்புகள் யாவும் இணைக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் உள்ள குறிப்பிட்ட தண்ணீர்த் தொட்டியைப் பாவிப்புக்கு உட்படுத்துமாறு கேட்டிருப்பதுடன் தற்போது அத்தொட்டி சிறுவர்களால் அசுத்தமாக்கப்படுவதாயும் சிதைக்கப்படுவதாயும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை அபிவிருத்தி சபை கவனிக்குமா?

வெ. பெருமாள்
தலைவர்
மன்னார் மாவட்ட
முன்னேற்றச்சங்கம்

தாள்வுப்பாடு,
மன்னார்.

# ஈரானில் இன்று நடப்பது வர்க்கப் போராட்டமே

[நேற்றைய தொடர்ச்சி]

இடது சாரியான ஹலிடேயின் கண்ணோட்டத்தில் 'இஸ்லாமிய புரட்சி' என்ற மதம் ஒருவகை கோட்பாட்டு முகமூடியே! ஷாவை எதிர்த்தவர்கள் பல்வேறு வர்க்கங்களைச் சார்ந்தவர்கள் என்பதை மூடி மறைத்து சிறுமுதலாளிகளின் [இவர்களின் சமூக பலம்முல்லாக்கள் மீது இவர்களுக்கிருந்து செல்வாக்கு மூலம் முதலில் வெளிப்படுத்தப்பட்டது] கணிசமான பங்களிப்பை நியாயப்படுத்துவதே இம்முகமூடியின் பயன்பாடு. 'இஸ்லாமிய புரட்சி' என்ற இலட்சியத்திற்கு ஒரு சமூக அர்த்தமும் உண்டு. ஷாவின் ஆட்சியில் அதிகாரமும் செல்வமும் சிறுமுதலாளி வர்க்கத்திற்கு 'எட்டாப் பழங்களாக' இருந்தன. இந்த வர்க்கத்தின் அபிலாஷைகளையே இந்த இலட்சியம் பிரதிபலிக்கின்றது.

**வெளியான்**

1979 பெப்ரவரியில் பல்வேறு வர்க்கத்தினரின் கூட்டிணைப்பே ஆட்சியைக்கைப்பற்றியதென்பதை நாம் மறத்தலாகாது. நகரத் தொழிலாளர், ஆய்வறிவாளர், தொழில் பார்த்த மத்தியதர வர்க்கத்தினர், மாணவர், பாரம்பரிய சிறு முதலாளிகள் ஆகியோரை ஷா எதிர்ப்பியக்கம் உள்ளடக்கியிருந்தது.

இந்தப் பின்னணியில் நோக்கும்போது இன்று ஈரானில் வர்க்கப் போராட்டம் கூர்மை அடைந்துவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இன்றைய ஆட்சியாளரும் முதலாளித்துவப் பாதையில் தான் செல்கின்றனர். ஆரம்பத்திலேயே கொமெய்னியும், பசார்கானும் தொழிற்சாலைகள் தொழிலாளரின் கட்டுப்பாட்டிற்குள்ளிருக்க வேண்டுமென்ற கோரிக்கையை எதிர்த்தனர். ஆயுதப்படைகளை மீண்டும் கட்டியெழுப்ப முனைந்தனர். இன்று தொழிலாளர் குழுக்களுக்கும் ஆட்சியாளருக்குமிடையே மோதல்கள் வலுவடைந்து வருகின்றனர். ஒரு வாரத்திற்கு 44 மணித்தியாலங்கள் வேலை செய்யவேண்டுமென ஆட்சியாளர் பணிக்கின்றனர் ஆனால் கணிசமான தொழிலாளர் குழுக்கள் 40 மணித்தியாலங்களே வேலை செய்கின்றனர். ஆதாயப் பங்கீடு பற்றித் தொழிலாளர் முன்வைத்த திட்டத்தை ஆட்சியாளர் நிராகரித்து விட்டனர். மோட்டார் கார் கைத் தொழிலை சுயமாக விருத்தி செய்யலாம் என ஈரானிய தொழிலாளர் நம்புகின்றனர். ஆனால் பிரிட்டிஷ் கம்பெனிகளின் உதவியை ஆட்சியாளர் நாடுகின்றனர்.

இதேபோன்று கிராமப்புறங்களிலும் பெரிய நிலக்கிழார்களின் பக்கமே அரசு நிற்கின்றது. நிலமற்றவர்களிடம் பங்கீடு செய்யப்பட்ட காணிகள் சில மீண்டும் பழைய சொந்தக்காரர்களிடம் - நிலக்கிழார்கள் - ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சிறுபான்மை இனங்கள், பெண்கள், மாணவர்கள் ஆகியோர் மீது தொடர்ந்து பலாத்காரமும் அடக்குமுறையும் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன.

ஈரானில் இன்று நடைபெறுவது வெறும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான 'பிச்சுப் பிடுங்கள்' என நினைப்பவர்கள் வெறும் நுனிப்புல் மேய்ப்பவர்களே. முரண்பட்ட சமூக சக்திகளுக்கிடையே, வர்க்கங்களுக்கிடையே நடைபெற்றுவரும் போராட்டங்களின் வெளிப்பாடே குண்டு வெடிப்புகளும் மரண தண்டனைகளும்.

மகத்தான ஈரானிய புரட்சியின் பயனாக ஈரானிய மக்கள் தாமே தமது தலைவிதியை நிர்ணயிக்கும் வாய்ப்பை முதல் தடவையாகப் பெற்றுள்ளனர்

வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க இந்தப் புரட்சியின் பலாபலன்களை அடிமட்ட மக்கள் அனுபவிக்கப்போகின்றனரா அல்லது ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் மீண்டும் ஈரானில் கோலோச்சப் போகின்றனவா?

## கருணாநிதி கைது எதிரொலி:

# தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வன்செயல்கள்! பலர் கைது!!

சென்னை, செப் 17

தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து தி. மு. க. தொண்டர்கள் நேற்று தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வன்செயல்களில் ஈடுபட்டனர்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் வீட்டின் முன்னாலும் வன்செயல்களில் ஈடுபட்டனர்.

தி. மு. க. தொண்டர்கள் வன்செயல்களில் ஈடுபட்டாலும் அ. தி. மு. க. தொண்டர்கள் கட்டுப்பாட்டுடன் இயங்க வேண்டுமென்றும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்றும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையிலுள்ள இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகத்தைப் பாதுகாப்பதற்காகவே கருணாநிதியைக் கைதுசெய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் நான்கு பஸ்ஸுக்கு தி. மு. க. தொண்டர்கள் தீவைத்ததாகக் கூறப்படுகிறது. திருவாரூர், தண்டி ஆகிய இடங்களில் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்ட 50க்கு மேற்பட்ட தி. மு. க. தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மதுரையிலிருந்து வந்த பஸ் ஒன்றிற்கும் தி. மு. க. தொண்டர்களால் தீ வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்திலும் பல கல்லெறிச் சம்பவங்கள் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

மதுரையில் மாணவர் கும்பலொன்று பஸ் ஒன்றின் கண்ணாடியை அடித்து நொருக்கியது. இதுதொடர்பாக 6 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் ஐந்து தமிழக சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் பல தி. மு. க. தொண்டர்களும் நேற்றுமுன்தினம் சென்னையில் கைதுசெய்யப்பட்டு இம்மாதம் 29ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (வெ)

## கருணாநிதி கைது: லோகசபையில் கண்டனம்

### விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு

சென்னை, செப் 17

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் ஐந்து சட்டசபை உறுப்பினர்களும் 10,000 தி. மு. க. தொண்டர்களும் தமிழ்நாடு அரசினால் கைது செய்யப்பட்டதற்கு தி. மு. க. உறுப்பினர் நேற்று இந்திய லோகசபையில் கண்டனம் தெரிவித்தார்.

அ. தி. மு. க. அரசு மக்களின் குடியியல் உரிமையை மறுத்துவருவதாகவும் இவ் உறுப்பினர் லோகசபையில் குற்றம்சாட்டினார்.

இதுதொடர்பாக லோகசபையில் விவாதிக்க வேண்டுமென்று இவர் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்தார். (வெ)

## இலங்கைப் படகு

சென்னை, செப் 17

நாகபட்டினத்தில் அபினுடன் இலங்கைப் படகொன்று சென்னை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. இப்படகில் பிரயாணம் செய்தவர்கள் தப்பிச்சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

அரிஜனர் மதமாற்றம்

## வெளிநாடு பின்னணி?

தென்இந்திய மாநிலங்களில் அரிஜனங்கள் இஸ்லாமியராக மதம் மாறுவதற்கு வெளிநாடு பின்னணியாக இருக்கிறதென்பதற்கு ஆதாரம் இல்லை என்று மத்திய அரசு உள்துறை அமைச்சர் திரு. ஜைல்சிங் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் சுமார் 1000 அரிஜனர் மதம் மாறி முஸ்லிம்களாக மாறினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## பாகிஸ்தானுக்கு 'எப்' 16 விமானங்கள்

வாஷிங்டன், செப் 17

பாகிஸ்தானுக்கு ஆறு 'எப் 16' ரக யுத்த விமானங்களை உடனடியாக வழங்குவது என்று அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு மேலும் நாற்பது 'எப் 16' ரக யுத்த விமானங்களை வழங்குவதற்கு றீகன் நிர்வாகம் அமெரிக்க காங்கிரஸிடம் அனுமதி கோரியுள்ளது. (வெ)

## இவர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

1977-ம் ஆண்டுக்குப் பின்பு ஆசிரிய பயிற்சியை முடித்து நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பதென்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது வருடாந்தம் 4260 ரூபாவை சம்பளமாகப் பெற்றுவரும் இவ்வாசிரியர்களின் சம்பளத்தை வருடாந்தம் 7500 ரூபாவாக அதிகரிப்பதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ட-வெ)

## மன்னார் அபி. சபையின் நிறைவேற்று குழு

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக மூதூர் எம். பி யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான எம். ஈ. எச். மஹ்றூம், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## மினி பஸ் குடைசாய்ந்தது

(சுண்டிக்குளி)

நேற்றுமுன்தினம் ஆனைக்கோட்டைச் சந்தியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ்சும் மினி பஸ் ஒன்றும் மோதிக்கொண்டபோது மினி பஸ் குடைசாய்ந்தது.

பிரயாணிகள் உயிர் தப்பினர். (வெ)


## முதலிடம்

(உண்டத்தரிப்பு

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சங்கீத, நடன, நாடகப் போட்டியில் தவாலி செசி, பீட்டேஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை கிழக்கிலிருந்து கிராமிய நடனத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. சுன்னாகம் மகளிர் கல்லூரியில் இப்போட்டி நடைபெற்றது. (கு)


## உங்கள் சவாரிக்கு சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் சைக்கிள் சிங்கர்




# சிங்கர் சைக்கிள்

கிராமமாயும் சரி நகரமாயும் நீங்கள் அலட்டிக் கொள்ளாமல் தங்குதடையின்றி ஓடுவதற்கு உகந்தது சிங்கர், கரடு முரடான மண் தெருவானாலும் சரி, கல்லும் குழியும் உள்ள கடின பாதையானாலும் சரி, சதுப்பு நிலமானாலும் சரி, வைரமே உருவான உறுப்புக்களைக் கொண்ட உறுதியான சிங்கர் நம்பமுடியாதவாறு சுகமாகவே ஓடுகிறது.

அசல் சிங்கர் பாரம்பரியத்தில் உருவான இச் சைக்கிள் ஆயுள் முழுவதும் உழைக்கின்றது.

ஒவ்வொரு சிங்கர் சைக்கிளுக்கும் விற்பனையின் பின் பராமரிப்புச் சேவையுண்டு.



சிங்கர் சிறப்பம்சங்கள்:

- உயர்தர உருக்குக் குழாய்ச் சட்டம்.
- அழுத்தி உருட்டிய உருக்கு அலகிலான கம்பிகள்
- குறைந்தபட்சம் 1800 இறாத்தல் தாங்கக்கூடிய சங்கிலி.
- நீடித்த பாவனைக்கும் இதமான சவாரிக்கும் குரோம் முலாமிடப்பட்ட போல் பெயாரிங்.
- அதி உயர்ந்த வெப்ப நிலையில் தடவப்பட்ட இரு பூச்சு இனமல் நிக்கல் முலாமிடப்பட்ட மூடித் தாப்பு.

சகல சிங்கர் காட்சியறைகளிலும் கிடைக்கும்

சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்,

83, சதாம் வீதி, கொழும்பு - 1. தொலைபேசி: 21466

சிங்கர் சைக்கிள் — சிங்கரின் பாரம்பரிய சிறப்பியல்புகளைக் கொண்டது.

விலை ரூபா 1,075/- (லகேஜ் இல்லாதது) இலகு தவணைக் கட்டண வசதியுண்டு.

# முல்லைத்தீவு மாவட்ட

# சரித்திர கலை கலாச்சார விபரங்கள் திரட்டப்படும்

## அரசாங்க அதிபர் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டச் சரித்திர, கலை, கலாசார விபரங்களைத் திரட்டுவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சுற்றறிக்கைகள், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 4 உதவி அரசாங்க அதிபர்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், இளம் விவசாயிகள் சங்கங்கள், கலை, கல்வி வட்டாரங்கள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

"இம் மாவட்டத்தின் நிலப் பரப்பு 1100 சதுரமைல்களாகும். பெரும் குடியேற்றப் பகுதிகளைக் கொண்ட மாவட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டினரே அநேகமாக குடியமர்த்தப்பட்டுள்ளனர். சனத்தொகை 77,000 ஆகும். 1979ம் ஆண்டுக்கணக்கின்படி வாக்காளர் தொகை 38,802. இந்த மாவட்டத்திற்கென தனியே ஒரு மாவட்ட அபிவிருத்திசபையும் இயங்குகிறது.

"இந்த மாவட்டத்திலே நிலைத்துள்ள வரலாறு சம்பந்தமான விவரங்களை உங்களின் அன்பினால், ஒத்துழைப்பால், சேவையினால், தியாகத்தினால் சேர்த்து ஒவ்வொரு பிரிவாகச் சேவை செய்துவைப்பதே எமது முதற்படிக் கடமையாகிறது. ஆர்வம் உள்ளோர், ஈடுபாடு கொண்டோர் யாபேரும் பங்குகொண்டாலன்றி இதனை நிறைவேற்றுவது கஷ்டமாகும். இதில் தங்களின் விசுவாசமான செயற்பாட்டை வரவேற்கிறோம்."

நாடோடிப்பாடல்கள், ராமிப்பாடல்கள், சிந்துக்கள், அருவிவெட்டுப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், கர்ணபரம்பரைக்கதைகள், டச்சுக்காரர், வெள்ளைக்காரர்காலத்து ஆட்சியில் நடந்த முக்கிய சம்பவங்கள், யானைபிடித்தல், அழிந்த அரண்மனைகள், கோட்டைகள் பற்றிய விபரங்களை சேகரித்து உதவவேண்டுமென்று சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கலாச்சார மன்றங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-வி)

## குறிகாட்டுவான் துறைமுக வேலைகள்

(மண்டைதீவு)

புங்குடுதீவு குறிகட்டுவான் துறைமுக மேடை வேலைகள் தற்போது தீவுப்பகுதி பெருந்தெருக்கள் திணைக்கள ஊழியர்களாற் சீர்திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி துறைமுக மேடை வேலைகளைத் தீவுப்பகுதி பெருந்தெருக்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. சு. பத்மநாதன் மேற்பார்வை செய்துவருகிறார். பெருந்தெருக்கள் திணைக்களம் இத்துறைமுக வேலைகளுக்கு எட்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (க)

## வீட்டுச்சுவர் இடிந்து விழுந்து சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பழைய வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததால் 13 வயதுச் சிறுவன் பரிதாபமாக மரணமானான்.

புங்குடுதீவைச் சேர்ந்த 13 வயதான இளையநந்தகுமாரின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

புங்குடுதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. தா. ஆ. நமசிவாயம் மரண விசாரணை நடத்தினார். வைத்திய அதிகாரி டாக்டர் எம். யோகவிநாயகன் பிரேத பரிசோதனை நடத்தினார்.

விசாரணையின்பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க-வி)

## இன்றைய பலன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

துலாம்: இப்பத்தின் அமைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்வில் தடைகள் விலகும். பெற்றோர் ஆதரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்: சூழ்ச்சியின் உச்சக்கட்டம் சோதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண் வைப்பீர்.

தனுசு: தந்தைவழி ஆதரவு தவறாமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் தவிடு பொடி. தனிக்கொடி பறக்கும்.

மகரம்: புதுமையான எண்ணங்கள் தலை தூக்கும். தொழில்துறையில் புதிய சாதனை உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

கும்பம்: பொருள் விரயத்திற்கு இடமுண்டு. கடமை மாற்றும் இடத்தில் கண் துடைப்பு வேலைகள் நடைபெறும். நண்பர் ஒருவர் ஏமாற்றுவார்.

மீனம்: வாழ்க்கையே ஒரு புதிராகத் தோன்றும். சில விஷயங்கள் உச்சக்கட்டத்தை அடையும். புதிதாக எதையும் ஆரம்பியாதிருப்பது நன்று.

சோதிட கலாநிதி

இருமலை க. வேலுப்பிள்ளை

## முகம் விகாரத்தினால்

## மனவேதனையடைந்த இளைஞர் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

தமது முகத்தில் ஏற்பட்ட விகாரத்தினால் மனக்கவலையடைந்த பத்தொன்பது வயது இளைஞர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

நல்லூரைச் சேர்ந்த இளையதம்பி தயாபரன் என்ற இளைஞரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரின் தந்தையான இட்னர் இளையதம்பி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"காலஞ்சென்ற எனது மகன், மோட்டார் கராஜ் ஒன்றில் வேலைபார்த்துவந்தார். இரு கிழமைக்கு முன்பு கராஜில் அவர் ரிங்கர் வேலை செய்துகொண்டிருக்கும் போது ஏற்பட்ட விபத்தினால் அவரின் முகம் கறுப்புநிறமடைந்து விகாரமாக மாறியது. இந்த கறுப்புநிறம் முகத்திலிருந்து நீங்குவது மிகவும் கஷ்டம் என்று பலர் கூறியதினால் அவர் மிகவும் மனவேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். சம்பவதினம் இரவு ஒன்பது மணியளவில் அவர் நஞ்சு அருந்திவிட்டதாக அறிந்தோம். அவரை உடனடியாக கார் மூலம் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற போது அங்கு அவர் உயிர் பிரிந்துவிட்டது."

விசாரணை முடிவில் தற்கொலை என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

சாட்சியை யாழ். பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. ஞா. சந்தியாப்பிள்ளை ஆஜர் செய்தார். (க[illegible]

## உரும்பராய் கருணாகரர்தேர்

(உரும்பராய்)

உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் தேர் நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிறு தீர்த்தமும், இரவு எட்டுமணிக்கு அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதனின் "தாயினும் நல்ல தலைவர்" என்ற தலைப்பைக்கொண்ட பேச்சும் இடம் பெறவுள்ளன.

நாளை சனிபிற்பகல் நடைபெறவுள்ள தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்து ஒலிபரப்பவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சந்நிதிதேர்

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதிதேர்த் திருவிழா சம்பந்தமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஆறுமணிக்கு விசேஷ சைவநற்சிந்தனையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை ஒலிபரப்புகின்றது.

இச் சைவநற்சிந்தனையை பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபையின் காரியதரிசி அ. பஞ்சாட்சரம் வழங்குகின்றார்.

## மண்டைதீவில் மருந்து தட்டுப்பாடு

(மண்டைதீவு)

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளிகள் தனியார் மருந்துச் சாலைகளில் பணம் கொடுத்து மருந்துகள் வாங்க வேண்டியிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (வி)


வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30
சிவாஜி
தர்மராஜா

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
ஜெகுமார் - லட்சுமி
அவன்-அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

லிடோ
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி இன்று முதல் குதூகல ஆரம்பம்
(காட்சிகள், 10-30, 2-30, 6-15 & 9-45
தமிழகத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி வெள்ளிவிழா கொண்டாடிய வெற்றிச் சித்திரம்.
காதல் இளவரசன் விழி அழகி
கமலஹாசன் ஸ்ரீ தேவி
முத்துராமன், சுந்தரராஜன், நம்பியார்
குரு
இசை: இளையராஜா
—ஈஸ்ட்மன் வண்ணத் திரை ஓவியம்—

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா - நாகேஷ்
ராமன் தேடிய சீதை
(ஈஸ்மன் கலர்—புதிய பிரதி

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். காமினியின் அற்புத நடிப்பைக் காண இன்னும் சில தினங்கள் மட்டும்.
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலுஜா
நீலக்கடலின் ஓரத்திலே
(வண்ணக் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெமினி - முத்துராமன் - எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா - சாவித்திரி - மனோரமா
நடித்த
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி
கற்பகம்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
அவர் இல்லாத சித்திரங்கள்

4-வது வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — சோமயாஜுலு
சங்கராபரணம் (கலர்)

REGAL றீகல் 20-th Last Day
DAILY 5 SHOWS
புரூஸ்லியின் சாகசம்
FIST OF FURY
—"புரூஸ்லி கோபக்காரன் ஆகிறான் மர்மம் என்ன?
அவனுக்கு செய்யப்பட்டவர் ஆபிரகாணக்கில்...

கடைசி 2 தினங்கள்
ராஜன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
நூல் வேலி
19-9-81
MADMAX

# சமூக சகோதரத்துவ வாரம் அனுஷ்டிக்கப்படும்

## யாழ் மா. சபை தலைவர் நடவடிக்கை

[ஏ. வி. மாணிக்கம்]

மகாத்மா காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் 2ம் தேதி முதல் ஒருவார காலத்திற்குச் சமூக சகோதரத்துவ வாரம் அனுஷ்டிப்பதற்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. எஸ் நடராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாரத்தினைக் கொண்டாட சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு யாழ் மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர்களும் யாழ். செயலகத்தினால் கோரப்பட்டுள்ளனர்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகவும் முக்கியமான பிரச்னையாக இருந்துவரும் சமூகப் பிரச்னைகளுக்கு நீர்வுகாண்பதற்கு உதவியாக மகாத்மா காந்தியின் பிறந்த தினமாகிய அக். 2ம் திகதி தொடக்கம் 8ம் திகதி வரை சமூகசகோதரத்துவவாரம் பிரகடனம் செய்யுமாறு அறவழிப் போராட்டக்குழு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவரைக் கோரியிருந்தது.

இதற்கு முன்னேடியாக ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள சமய சமூக நிறுவனங்களுடன் அவ்வப்பகுதிஅரசாங்க அதிபர்களும் கலந்துரையாடல் நடத்துவர்.

இது தொடர்பாக அறவழிப்போராட்டக்குழு முழுமையான ஒரு வேலைத்திட்டத்தைதத் தயாரித்து அதை இவ்வாரம் நடைமுறைப்படுத்துவதென்றும் தீர்மானித்துள்ளது. (மா)

# தென் ஆபிரிக்க நாடுகளில் இலங்கை உப்புக்கு கிராக்கி

[காங்கேசன்துறை]

தென் ஆபிரிக்க நாடுகளில் ஸ்ரீலங்கா உப்பிற்கு ஏற்பட்டுள்ள கிராக்கியைத் தொடர்ந்து காங்கேசன்துறைத் துறைமுகத்தின் ஊடாக உப்பு ஏற்றுமதி ஆரம்பமாகியுள்ளது இதுவரை காலமும் உப்பு ஏற்றுமதியில் ஏகபோக இடத்தைப் பெற்றிருந்த இந்தியாவுடன் வர்த்தக ரீதியில் உப்பை ஏற்றுமதிசெய்ய ஸ்ரீலங்காவும் முன்வந்துள்ளது.

எம் வி 'ரொங்யாங்' என்னும் தைவான் தேசத்தைச் சேர்ந்த கப்பல் சுமார் 8,500 தொன் உப்பை ஏற்றுமதி செய்வதற்காக காங்கேசன் துறைத் துறைமுகத்தை வந்து சேர்ந்துள்ளது. இந்த உப்பு விற்பனவு மூலம் ஸ்ரீலங்கா உப்புக் கூட்டுத்தாபனம் அந்நியச் செலாவணியாக சுமார் 7 லட்சம் ரூபாவைப் பெற்றுள்ளது. அத்துடன் கப்பல் ஏற்றுமதி வேலைகளுக்காக உப்புக் கூட்டுத்தாபனம் உப்பைக் கொள்வனவுசெய்த கம்பனியாரிடம் மேலதிகமாகச் சுமார் 10 லட்சம் ரூபாவையும் அந்நியச் செலாவணியாகப் பெற்றுள்ளது.

இதுவரை காலமும் சாதாரண உப்பை ஏற்றுமதிசெய்த உப்புக் கூட்டுத்தாபனம், அரைத்த உப்பிற்குத் தென் ஆபிரிக்க நாடுகளில் கிராக்கி இருப்பதை அறிந்து தற்பொழுது அரைத்த உப்பை ஏற்றுமதிசெய்ய ஆரம்பித்துள்ளது. இவ்வருட இறுதிக்குள் 20,000 தொன் உப்பு ஏற்றுமதிசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உப்பை வெளிநாட்டில் உப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் விற்பனைசெய்த கப்பல் ஏஜென்டான திரு.க.ஜெயபாலசிங்கத்திற்கு உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. எச். பி. வீரபீட்டியா நன்றி தெரிவித்துள்ளார்.

உப்பு ஏற்றுமதி வேலைகளில் சுமார் 500 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் 50லொறிகளும் போக்குவரத்து வேலைகளில் ஈடுபட்டுள்ளன. தற்பொழுது காங்கேசன் துறைத் துறைமுகம் ஊடாக ஏற்றுமதிசெய்யப்படும் உப்பு எதிர்வரும் மார்கழி மாதத்திலிருந்து யாழ்ப்பாணத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும்.


## மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

- மத்தியகிழக்கு
- சிங்கப்பூர்
- பாரிஸ்
- நைஜீரியா
- லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி) ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

உலகின் எப்பாகத்துக்கும்

- எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

விமான டிக்கட்டுகள்

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றைக் கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளப் பிரபல்யமான MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன் ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

## மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் [சிலோன்] லிமிட்

*8, பருத்தித்துறை வீதி - யாழ்ப்பாணம்.

த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


# "ஈரானிய அரசு இந்தஆண்டுக்குள் வீழ்ச்சியடையும்"

## முன்னாள் ஜனாதிபதி பானிசதார் பேட்டி

பாரீஸ், செப். 17

"தற்போதைய ஈரானிய அரசாங்கம் இந்த ஆண்டு முடிவுக்குள் வீழ்ச்சியடையும். ஈரானிய அரசாங்கம் எனது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் நான் அங்கு திரும்பிச் செல்வதற்கு தயாராகவுள்ளேன்".

மேற்கண்டவாறு தற்போது பாரிஸில் அரசியல் அஞ்ஞாதவாசம் மேற்கொண்டுவரும் ஈரானின் முன்னாள் ஜனாதிபதி ஜனாப் பானி சதார் இந்திய பத்திரிகையொன்றுக்குஅளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில்மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஈரானில் அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் மீது விதிக்கப்படும் மரணதண்டனை நிறுத்தப்படவேண்டும். இத்தண்டனையை வழங்கும் விசாரணைச் சபைகள் கலைக்கப்பட வேண்டும் ஈரானிய மததலைவர் அயத்தொல்லா கொமெய்னி ஈரானில் சமாதானத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதுவே எனது நிபந்தனைகளாகும்" என்றார். [வெ]

## இல்லப்போட்டி

[யாழ்ப்பாணம்]

அராலி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் திரு சி. டாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கலந்துகொள்வார். திருமதி கலைபக்கி திருநாவுக்கரசு பரிசில்களை வழங்குவார்.

### கொல்லங்கலட்டியில்

## இன்று'வன்னியர்' நினைவு விழா

[மாவிட்டபுரம்]

அமரர் வன்னியசிங்கம் நினைவு விழா அவரது பிறந்த இடமான கொல்லங்கலட்டியில் இன்று நடைபெறுகிறது.

சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா தலைமையில் மாவை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் திரு அ. அமிர்தலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு, சு நடராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரை ஆற்றுவார்கள்.

இவ்விழாவுடன் தம்புசெல்வரத்தினம் நினைவு சன சமூக நிலைய புதிய கட்டிடத்திறப்பு விழாவும் இன்று கொல்லங்கலட்டியில் நடைபெறுகிறது. [அ]

# இப்படியும் நடக்கிறது

பத்திரிகைகளில் வெளிவரும்செய்திகளில், விளம்பரங்களில் பிழைகள் வருவது தவிர்க்கமுடியாதது. ஆனல் இப்பிழைகள் தவறுதலாக ஏற்படுகிறதா அல்லது வேண்டுமென்றே திணிக்கப்படுகிறதா என்பதுதான் கவனிக்கவேண்டியது!

இவ்வகையில் ஈழத்தின் பிரபல ஆங்கிலத் தினசரியொன்றில் வெளிவந்த 'டெமோகிறேஸி' விளம்பரம் சர்வதேசப் புகழ் பெற்றது!

இலங்கையின் ஒரு ஆங்கில மாலைத் தினசரி, புகைப்படங்களை இடம்மாறிப் பிரசுரித்ததற்காக (ஒரு புகைப்படம் ஒரு அமைச்சர் சம்பந்தப்பட்டது), அப்பத்திரிகையின் ஆசிரியர் பாராளுமன்றத்தால், நீதிவிசாரணைக்குட்படுத்தப்பட்டு, அபராதம் செலுத்தியிருந்ததும் உண்டு.

நேற்று வெளியான ஈழத்தின் பிரபல ஆங்கிலத் தினசரி, தனது பதின்மூன்றாவது பக்கத்தில் இரு முக்கிய பிரமுகர்களின் புகைப்படங்களை இடம்மாறிப் பிரசுரித்துவிட்டது.

இதில் ஒருவர்; உலகப் பிரசித்தி பெற்ற 'ஒபரோய்' ஹோட்டல்களின் தலைவர் திரு. எம். எஸ். ஒபரோய். மற்றைய பிரமுகர் வண. மெடிவெல சங்கரத்ன நாயக்க தேரோ எனப்படும் ஒரு பௌத்த பிக்கு இவர் தனது 70-வது பிறந்த தினத்தை நேற்று முன்தினம் கொண்டாடினர். இரு பிரமுகர்களும் இரண்டு துருவங்கள்.

சின்னப் பத்திரிகைகளில்தான் தவறுகள் என்றால் பெரிய பத்திரிகைகளில்.........

ஊடுருவி

## மாவட்டசபையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரனின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம். பிகள் எதையும் பேசலாம் ஆனல் மாவட்ட அபிவிருத்தி சபையில் அப்படிபேச முடியாது என்று தெரிவித்த பதில் தலைவர் திரு. நாகராசா 'திருமலை எம். பி, மாவட்ட அமைச்சர்கள் கூட்டத்தில் மாவட்ட சபை உறுப்பினர்களின் சிறப்புரிமை பற்றி பிரதமரிடம் கேட்டபொழுது அவர் மறுத்துவிட்டதாகவும் சொன்னர். மாவட்டசபைத் தலைவர் மற்றைய மாவட்ட சபைத் தலைவர்களுடனும், பிரதமருடனும் கதைத்து ஒரு முடிவெடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்.

மானிப்பாய் எம். பி. திரு. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது; 1953ல் அமைக்கப்பட்ட விசேஷ குழுதான் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு சிறப்புரிமை வழங்க வேண்டுமென தீர்மானித்தது அதுபோல் ஒரு குழு நியமித்து மாவட்டசபை உறுப்பினருக்கும் ஆராய்ந்து தான் வழங்க வேண்டும். [மா-க]

## வெளியேற்றத்தை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதுபற்றி கட்சி, சபாநாயகருக்கு முறைப்படி அறிவிக்க வேண்டும்,

இதே நேரத்தில், புதிய அரசியலமைப்பு; பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்படும் போது இதனை எதிர்த்து அந்த உறுப்பினர் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கோ உயர் நீதிமன்றத்துக்கோ மேன்முறையீடு செய்ய வகைசெய்கிறது.

இதுபற்றி டாக்டர் நெவில் பெர்ணண்டோ கருத்துவெளியிடுகையில்; எம் பி பதவியிலிருந்து ராஜினுமாசெய்யுமாறு கட்சியின் தலைவர் தம்மைக் கேட்டதாகவும், இதற்கு இணங்க தாம் மறுத்துவிட்டதாகவும் கூறினர்

"நான் 28,000 மக்களினல் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்ற அங்கத்தவனுக வந்தேன் நான் மக்களுக்கு குற்றம் எதுவும் செய்யவில்லை. ஏன் நான் ராஜினுமா செய்யவேண்டும்? நான் குற்றவாளியாகக் காணப்படவும் இல்லை; குற்றங்கள்புரியவுமில்லை ஐ தே கட்சி என்னை வெளியேற்றினுலும் பாராளுமன்றத்தில் நான் தொடர்ந்திருக்கஉரிமை உண்டு" என்றும் டாக்டர் நெவில் பெர்ணண்டோ தெரிவித்தார்

## எம். ஜி. ஆருக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முதலமைச்சருக்கு தந்தியொன்றை அனுப்பியிருக்கிறர். அதே சமயம் இலங்கை தமிழர்தொடர்பான பிரச்னை தமிழ்நாட்டுக் கட்சிகளுக்கிடையில் பூசலைக்கிளப்பிவிட்டிருப்பது குறித்து அவர் கவலை தெரிவித்திருக்கிறர். தமிழ் கட்சிகளுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டிக்காக்கவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தியிருக்கிறர்.


## மரண அறிவித்தல்

### தெ. ஜெ. இராஜரெட்ணம்

தெல்லிப்பளை ஜெயரெட்ணம் இராஜரெட்ணம் ஜெயம்] ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி காலமாகிவிட்டார். இவர் அருள் ராசமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற ரி.சி. ராஜரெட்ணம், திருமதி சி. ராஜரெட்ணம் ஆகியோரின் மகனும், திரு, திருமதி. எஸ். என் அருளம்பலத்தின் மருமகனும், ரோகினி, ரேனுகா, றஜீவ் ஆகியோரின் தந்தையும், வனம், சகுந்தலா, சுலோச்சன, காலஞ்சென்ற தர்மராஜா ஆகியோரின் சகோதரரும், விஜயன், அருளானந்தம், சிறீகரன் ஆகியோரின் மாமனரும், ஜேம்சன் அருளம்பலம். விமலா, ராஜாதிசநாயகம், சாம் நவரெட்ணம் பொன்மணி ஆகியோரின் மைத்துனரும், வசி, ரவி, பிரதீபன் ஆகியோரின் பேரனுமாவார் அன்னரின் பூதவுடல் ஈமைக் கிரியைகளுக்காக சனிக்கிழமை [19-9-81] பிற்பகல் 4மணியளவில் அன்னரின் இல்லத்தில் இருந்து துண்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

இல. 1 சோமசுந்தரம் ஒழுங்கை
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[0979]


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது Registered as a NewsPaper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி; 7707, 889, 8126.